**12 - STD**

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2023

## வரலாறு

பதிவு எண்.

நேரம்: 3.00 மதிப்பெண்கள்: 90

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 20 x 1 = 20

1. சுயராஜ்யம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன்- எனக் கூறியவர்.
அ) பாலகங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி இ) சுபாஷ் சந்திர போஸ் ஈ) பாரதியார்

2. இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியர்
அ) சுபாஷ் சந்திர போஸ் ஆ) காந்தியடிகள் இ) AO ஹியூம் ஈ) பாலதங்காதர திலகர்

3. பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்க.
அ) இந்திய பத்திரிக்கை சட்டம் 1910 - 1. காந்தியடிகள்
ஆ) விடிவெள்ளிக் கழகம் - 2. சார்ந்திருக்கும் நிலைக்கு எதிரான புரட்சி
இ) சுயராஜ்யம் - 3. தேசிய அளவிலான செயல்பாடுகளை நசுக்கியது
ஈ) சுதேசி - 4. கல்விக்கான தேசியக் கழகம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 4 | 2 |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 3 | 4 | 1 | 2 |
| ஈ) | 1 | 2 | 4 | 3 |

4. தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் தொடங்கப்பட்டது
அ) திலகர் ஆ) அன்னிபெசண்ட் இ) பிபி வாடியா ஈ) எச்.எஸ். ஆல்காட்

5. காந்தியடிகள் அரசியல் குரு யார்?
அ) திலகர் ஆ) கோகலே இ) WC பாணர்ஜி ஈ) MG ரணடே

6. 1923 ல் மேதிலால் நேரு மற்றும் சி.ஆர். தாஸ் ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன?
அ) சுயாராஜ்ய கட்சி ஆ) கதார் கட்சி இ) சுதந்தரா கட்சி ஈ) கம்யூனிஸ்ட் கட்சி

7. கல்பனாதத் எதனுடன் தொடர்புடையவர்?
அ) ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ஆ. வங்காள சபை ரிபப்ளிகன் அசோசியேஷன்
இ) இந்தியக் குடியரசு இராணுவம் ஈ) இவற்றில் ஏதுமில்லை

8. முதலாவது பருத்திச் தொழிற்சாலை பம்பாயில் தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1852 ஆ) 1854 இ)1861 ஈ) 1865

9. 1937 இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது
அ) 12 மாகாணங்கள் ஆ) 7 மாகாணங்கள் இ) 5 மாகாணங்கள் ஈ) 8 மாகாணங்கள்

10. 1946 ல் இடைக்கால அரசாங்கம் யாருடைய தலைமையில் அமைக்கப்பட்டது?
அ) ஜவஹர்லால் நேரு ஆ) மௌலானா அபுல் கலாம் ஆசாத்
இ) ராஜேந்தர பிரசாத் ஈ) வல்லபாய் படேல்

11. பின்வரும் நிகழ்வுகளின் சரியான வரிசையைத் தேர்வு செய்க.
(i) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை (ii) நேரடி நடவடிக்கை நாள்
(iii) ஆகஸ்ட் கொடை (iv) தனிநபர் சத்யாகிரகம்
அ) I, ii,iii,iv ஆ) iii,i,ii,iv இ) iii,iv,i,ii ஈ) iii,iv,ii,i

12. மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம்
அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா

13. பூமிதான இயக்கத்தை தொடங்கிவர்
அ) ராம்மனோகர் லோகியா ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்
இ) வினோபா பாவே ஈ) சுந்தர்லால் பகுகுணா

14. கீழ்கண்டவற்றில் எது சமயத்தை இரண்டாம் நிலைக்கு தள்ளியது?
அ) மறுமலர்ச்சி ஆ) சமய சீர்திருத்தம்
இ) புவியியல் கண்டுபிடிப்பு ஈ) வர்த்தகப் புரட்சி

15. வட மெரிக்காவில் முதன் முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள் ________
அ) போர்ச்சுகீசியர் ஆ) ஸ்பானியர் இ) டேனியர் ஈ) ஆங்கிலேயர்

16. பாஸ்டில் சிறை தகர்ப்பு _____ இல் நடந்தது.
அ) 1789 ஜுன் 5 ஆ) 1789 ஜுலை 14 இ) 1789 நவம்பர் 11 ஈ) 1789 மே 1

17. இரு உலகங்களின் நாயகன் என கொண்டாடப்பட்டவர் _____ ஆவார்.
அ) சார்லஸ் ஆல்பிரட் ஆ) பிஸ்மார்க் இ) மூன்றாம் நெப்போலியன் ஈ) கரிபால்டி



CamScanner

18. ஹிட்லரை ஜெர்மனியின் பிரதம அமைச்சராக நியமித்தவர் யார்?
அ) ஜெனரல் லூடன்டார்ஃப் ஆ) வான் ஹிண்டன்பர்க்
இ) ஜெனரல் ஸ்மட்ஸ் ஈ) ஆல்ஃபிரட் வான் பெத்மண்
19. பேர்ல் துறை முகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் _____ ஆவார்.
20. கூற்று : பன்னாட்டுச் சங்கம் ஒரு தோல்வி என்பதை இரண்டாம் உலகப்போர் நிரூபித்தது.
காரணம் : மற்றொரு போர் ஏற்படா வண்ணம் தடுக்க ஒரு சக்திவாய்ந்த அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை தலைவர்கள் உணர்ந்தனர்.
அ) கூற்று, காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி காரணம் தவறு. ஈ) கூற்று தவறு காரணம் சரி.

## பகுதி - II

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடை தருக. (30 வது வினா கட்டாய வினா)** **7 x 2 = 14**

21. புதிய நிலவுடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகளை எழுதுக.
22. மிதவாத தேசியவாதிகளின் "இறைஞ்சுதல்" கொள்கை (The Mendicant Policy) என்றால் என்ன?
23. அன்னிபெசன்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திர பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.
24. காந்தியடிகளின் சம்பரான் சத்தியாக்கிரகத்தின் போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்கள் யாவர்?
25. லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் என்ன?
26. அரசமைப்பின் ஷரத்து 370 ன் முக்கியத்துவம் என்ன?
27. சரடோகா போரின் முக்கியத்துவத்தை குறிப்பிடுக.
28. இரவலர் சட்டங்கள் பற்றி விவரமாக எழுதுக.
29. மூனிச் ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை?
30. கோமிங்பார்ம் குறித்து நீங்கள் அறிவதென்ன?

## பகுதி - III

**III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடை தருக. (40 வது வினா கட்டாய வினா)** **7 x 3 = 21**

31. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிக்கைகளின் பங்கினை எழுதுக.
32. கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?
33. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
34. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள்?
35. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.
36. 1492 இல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக.
37. செப்டம்பர் படுகொலைகள் எதனால் ஏற்பட்டது?
38. அகழிப்போர் எவ்வாறு நடத்தப்பட்டது?
39. இந்தோனேஷிய விடுதலைக்கு சுகர்னோ ஆற்றிய பங்கை மதிப்பிடுக.
40. நோட்டா உருவாக்கப்பட்டதின் பின்னணியைக் கண்டறியவும்.

## பகுதி - VI

**III. அனைத்து வினாக்களுக்கு விடை தருக. (47 வது வினா கட்டாய வினா)** **7 x 5 = 35**

41. அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்றக் காரணமான சமூக - பொருளாதாரக் காரணிகளை ஆய்க. (அல்லது)
ஆ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.
42. அ) இந்திய விடுதலைப்போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக. (அல்லது)
ஆ) 1919 - 1939 ஆம் ஆண்டுகளுக்கிடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் பற்றி எழுதுக.
43. அ) ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன? (அல்லது)
ஆ) இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக.
44. அ) இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் யாவை? அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க ஆசிய நாடுகள் இணைந்ததில் நேரு அவர்களின் பங்கினை விளக்குக (அல்லது)
ஆ) முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக.
45. அ) இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பை ஆராயவும். (அல்லது)
ஆ) தொழிற்புரட்சி ஏன் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.
46. அ) முதல் உலகப்போரின் காரணங்களையும் விளைவுகளையும் கணக்கிடுக. (அல்லது)
ஆ) இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும் ஹிட்லரும் எந்த அளவிற்கு காரணமானவர்கள் என்பதனை ஆராய்ந்து கூறுக.
47. இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகள் நடைபெற்ற கீழ்க்கண்ட ஐந்து இடங்களைக் இந்திய வரைபடத்தில் குறிக்கவும்
1. பம்பாய் 2. கல்கத்தா 3. சென்னை 4. சூரத் 5. அலகாபாத் (அல்லது)
ஆ) அமெரிக்க விடுதலைப்போரில் ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோட்டிட்டு காட்டவும்.



CamScanner